


**05. 07. 2025**

தலைப்பு செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி அர்ஜெண்டினா தலைநகர் பியூனஸ் ஏரிஸில், அதிபர் ஜாவியர் மிலைனுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்றுமாலை மேற்கொள்கிறார்.

2. ஏழை எளிய கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் எழுச்சியை ஏற்படுத்தவே கூட்டுறவு அமைச்சகம் தோற்றுவிக்கப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

3. பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 707 ஹெக்டேர் அலையாத்தி பரப்பு மீட்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. கார்நாடக அணைகளிலிருந்து உபரிநீர் காவிரியில் திறக்கப்படுவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 53 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

5. விம்பிள்டன் கிராண்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் 2-வது சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, மெக்சிக்கோவின் ரெய்ஸ் இணை இன்று களமிறங்குகிறது

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அர்ஜெண்டினா அதிபர் ஜாவியர் மிலைனுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை தலைநகர் பியூனஸ் ஏரிஸில் இன்று மேற்கொள்கிறார்.

வர்த்தகம், முதலீடு, சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்த முக்கிய பேச்சுவார்த்தைகள் இதில் இடம்பெறுகின்றன.

5 நாடுகள் பயணத்தின் 3-வது கட்டமாக இன்றுகாலை அர்ஜெண்டினா சென்றடைந்த பிரதமருக்கு இந்திய வம்சாவளியினர் கலைநிகழ்சிகளுடன் சிறப்பான வரவேற்பை அளித்தனர்.

அந்நாட்டின் சுதந்திர போராட்ட வீரர் மற்றும் தேசத்தின் தலைவரான ஜென்ரல் **Jose De San Martin** சிலைக்கு பிரதமர் இன்று அஞ்சலி செலுத்துகிறார்.

பின்னர் பிரதிநிதி நிலையிலான உயர்நிலை பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொள்கிறார்.

அர்ஜெண்டினா பயணத்தை முடித்துக்கொண்டு 4-வது கட்டமாக பிரதமர் நாளை பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

முன்னதாக ட்ரினட் டோபாகோவில் அந்நாட்டு பிரதமர் கம்லா பெர்சத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து இருநாடுகளிடையே 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் மத்திய கூட்டுறவு துறை அமைச்சகம் 64 புதிய திட்டங்களை அறிமுகம் செய்யதுள்ளதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் நாட்டின் முதலாவது கூட்டுறவு பல்கலைக்கழகத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசியஅவர், கோடிக்கணக்கான ஏழை, எளிய, கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தவே மத்திய கூட்டுறவு அமைச்சகம் உருவாக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

கூட்டுறவு இயக்கத்தின் கீழ் 40 லட்சம் தொழிலாளர்கள் இணைந்திருப்பதாக அமைச்சர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

கொள்கை உருவாக்குதல், தரவுகள் ஆய்வு, கூட்டுறவு மேம்பாட்டு திட்டங்கள், புதிய ஆராய்ச்சிகளுக்கு கூட்டுறவு பல்கலைக்கழகம் வழிகோலும் என்றும் திரு. அமித்ஷா எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

தெற்கு நாடுகளின் ஒருங்கிணைந்த நிலையான வளர்ச்சியை இந்தியா உறுதி செய்வதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் புதிய வளர்ச்சி வங்கியின் 10-வது வருடாந்திர ஆளுநர்கள் மாநாட்டில் உரையாற்றியஅவர், இதனொரு பகுதியாக ஜி-20

கூட்டமைப்பில் ஆப்பிரிக்க யூனியனை நிரந்தர உறுப்பினராக்கிய இந்தியாவின் நடவடிக்கையை சுட்டிக்காட்டினார்.

வளர்ந்து வரும் நாடுகளில் வளர்ச்சி இலக்கிற்கான நிதி பற்றாக்குறையை எடுத்துரைத்த அவர், கோவிட் சூழலுக்குபின் இலக்கு மற்றும் நிகழ்காலத்திற்கான இடைவெளி 4.2 டிரில்லியன் டாலர் அளவிற்கு அதிகரித்துள்ளதாக கவலை தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

ஹெல்மட்

நாட்டில் இருசக்கர வாகன ஓட்டிகள் அரசின் **BIS** தரச்சான்றிதழ் பெற்ற தலைகவசங்களை மட்டுமே பயன்படுத்துமாறு மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

176-க்கும் மேற்பட்ட தலைக்கவசம் தயாரிக்கும் நிறுவனங்கள் செயல்படும் நிலையில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தின் அடிப்படையில் தரமான தலைக்கவசங்களின் அவசியத்தை அமைச்சம் வலியுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 707 ஹெக்டேர் அலையாத்தி பரப்பு மீட்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையில் இத்திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்து 350 ஹெக்டேரில் புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கி சாதனை படைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே.பழனிச்சாமி

தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள அஇஅதிமுக தலைமையில் வலுவான கூட்டணி அமையும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், அஇஅதிமுக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் வர இருப்பதாக கூறினார்.

ஆளும் திமுக-விற்கு எதிராக அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

மேட்டூர்

கார்நாடக அணைகளிலிருந்து உபரிநீர் காவிரியில் திறக்கப்படுவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நண்பகல் நிலவரப்படி வினாடிக்கு 53 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து 40 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் நீர்வரத்து வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

சேகர்பாபு

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், திருச்செந்தூர் வரும் பக்தர்களின் வசதிக்காக 3 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

குடிநீர், மருத்துவம், சுகாதாரம், கழிப்பிட வசதிகள் போதிய அளவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதனிடையே நாளைமறுநாள் குடமுழுக்கு நடைபெறவுள்ள நிலையில் பக்தர்களின் பாதுகாப்பிற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட்ஜான் கூறியுள்ளார்.

.. வாய்ஸ் ..

கும்பாபிஷேகத்தை ஒட்டி தூத்துக்குடி, நெல்லை, உவரி, கிழக்கு கடற்கரை சாலை வழியாக திருச்செந்தூருக்கு வரும் சரக்கு, கனரகம் மற்றும் தனியார் வாகனங்களுக்கு இன்றுமுதல் மூன்று நாட்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

நெல் கொள்முதல்

தமிழகத்தில் விவசாயிகளுக்கு நெல் கொள்முதலுக்கான நிலுவைத்தொகை வழங்க 810 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

வரும் காலங்களில் 7 நாட்களுக்குள் கொள்முதல் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

சுய உதவிக்குழுவினர்

தமிழகத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினரின் உற்பத்தி பொருட்களுக்கான இயற்கை சந்தை சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மகளிர் சுய உதவிக்குழுவினரின் பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானிய மதிப்பு கூட்டுப்பொருட்கள் பனைஓலை பொருட்கள் உள்ளிட்டவை விற்பனை செய்யப்பட உள்ளன.

❖❖❖❖❖❖❖

திருவாரூர் - வாய்ஸ்

திருவாரூர் மாவட்டத்தில் பள்ளிகள் இயங்கும் சாலைகளில் மாணவ, மாணவிகள் செல்லும் நேரங்களில் கனரக வாகனங்களை இயக்க கூடாது என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

திருப்பத்தூர், அரியலூர் மாவட்டங்களில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தின் கீழ் விவசாயிகள் மானியத்தில் செடி, விதை தொகுப்புகளை பெற்று பயனடையலாம் என அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்றுமுதல் வரும் 22-ம் தேதி வரை நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

கொடைக்கானல் - வாய்ஸ்

கொடைக்கானலில் வார விடுமுறையை ஒட்டி, சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் திட்டமில்லா பகுதிகளில் கட்டப்பட்ட கல்வி நிறுவன கட்டடங்களை வரண்முறைப் படுத்த தமிழக அரசின் **tcponline** இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் குடியாதத்தத்தில் உலக அமைதி மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

பள்ளி கல்லூரி மாணாக்கர் பொதுமக்கள் உட்பட 500-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖

வானிலை

மேற்கு திசைக்காற்றின் வேக மாறுபாடு காரணமாக நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் நாளை இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

லண்டனில் நடைபெறும் விம்பிள்டன் கிராண்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் 2-வது சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, மெக்சிக்கோவின் ரெய்ஸ் இணை - ஸ்பெயின், அர்ஜெண்டினா இணையுடன் இன்று மோதுகிறது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

பர்மிங்ஹாமில் இங்கிலாந்திற்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3-ம் நாளான நேற்று இந்தியா தனது 2-வது இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 64 ரன் எடுத்திருந்தது.

இந்தியா தற்போது 244 ரன் முன்னிலையில் உள்ளது.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் இந்தியா 587.

இங்கிலாந்து 407.

4-ம் நாள் ஆட்டம் இன்றுபிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

கனடா ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் - ஜப்பானின் நிஷிமோட்டோவை எதிர்கொள்கிறார்.

இன்று நடைபெற்ற காலிறுதியில் கிடாம்பி ஸ்ரீகாந்த் - தைவானின் டியான்சென்னை 21-18, 21-9 என்ற செட்களில் வென்றார்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖